| | | |
|---|---|---|
| சாட்சி : PW2<br>ஸ்ரீகாந்த் | OS.241/22 | 13.12.2023 |

**PW2– குறுக்கு விசாரணை**

வாதி தாக்கல் செய்த வழக்கு விபரங்கள் எனக்கு தெரியும். 30 செண்டில், 15 செண்ட் வாதிக்கு சொந்தம் என்பதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள நான்கெல்லையில் மேற்கில் பிரதிவாதி வீடு உள்ளது என்றால் சரிதான். கிழக்கில் வாதி என்ன வீடு கட்டியுள்ளார் என்றால் கீற்று கொட்டகை அமைத்துள்ளார். கீற்று கொட்டகை எப்போது அமைத்தார்கள் என்றால் சுமார் 5 வருடத்திற்கு முன்பு அமைத்தார். கீற்று கொட்டகையில் குடியிருக்கிறார்களா அல்லது ஆடு,மாடு கட்டியுள்ளார்களா என்றால் அவ்வப்போது வந்து செல்வார்கள். தற்போதும் வாதி வெளியூரில் தான் இருந்து வருகிறார் என்றால் பஸ் வசதி இல்லாததால் டோல்கேட்டில் இருந்து வருகிறார். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். வழக்கின் விபரங்கள் எனக்கு தெரியது என்றும் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.